செய்தி வெளியீடு எண்: 368 நாள் : 09.07.2013

# செய்தி வெளியீடு

**உலக சதுரங்க வாகையர் போட்டி நவம்பர், 2013–ல் சென்னையில் நடைபெறுவதையொட்டி முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ளும் ஒருங்கிணைப்பு குழுவின் கூட்டம் 9–7–2013 அன்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் மற்றும் ஒருங்கிணைப்புத் தலைவருமான முனைவர் வைகைச் செல்வன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இவ்வருடம் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள உலக சதுரங்க வாகையர் போட்டி (World Chess Championship) தற்போதைய உலக சதுரங்க வாகையருமான கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் தற்போதைய உலகத்தர வரிசையில் முதல் சதுரங்க வீரராகவும், சர்வதேச சதுரங்க கூட்டமைப்பு (FIDE) தரவரிசைப்பட்டியலில் இதுவரை உயர்ந்த அளவில் 2872 புள்ளிகள் பெற்று முன்னிலையில் உள்ள நார்வே நாட்டைச் சார்ந்த திரு மேக்னஸ் கார்ல்சன் (Mr. Magnus Carlsen) ஆகியோருக்கிடையே நடைபெறும் என்று 8–4–2013 அன்று சட்டமன்றத்தில் தெரிவித்து, இதற்கென ரூ.29 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்போட்டியினை நடத்தும் அமைப்பாளராக (Patron) இருப்பார்கள்.

உலக சதுரங்க வாகையர் போட்டியினை சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடத்திட அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு குழுவின் கூட்டம் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான முனைவர் வைகைச்செல்வன் அவர்கள் தலைமையில் இன்று (9–7–2013) சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்களான திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தலைமைச் செயலாளர், திரு முகம்மது நசீமுத்தீன், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, திரு க. ராஜாராமன், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர் / உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திரு க. சண்முகம், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை, திருமதி த. சபிதா, இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, முனைவர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர், உள்துறை மற்றும் ஆயத்தீர்வைத் துறை, முனைவர் ரா. கண்ணன், அரசு முதன்மைச் செயலாளர், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, திரு க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் மா. ராஜாராம், இ.ஆ.ப., அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, திரு ஜே.சி.டி. பிரபாகர், எம்.எல்.ஏ., தலைவர், அகில இந்திய சதுரங்க விளையாட்டுக் கழகம், திரு வெங்கட்ராம ராஜா, தலைவர், தமிழ்நாடு சதுரங்க விளையாட்டுக் கழகம், திரு டி.வி. சுந்தர், துணைத் தலைவர், சர்வதேச சதுரங்க கூட்டமைப்பு ஆகியோர் பங்கேற்றனர்.

(ஒ–ம்) க. ராஜாராமன்,
உறுப்பினர் செயலாளர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**